திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகரவர்களே, பசுந்தாள் உரம் என்றால், விழுந்ததும்கூட பசுந்தாள் உரம்தான் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. க. மு. ராசகோபால் : தலைவரவர்களே, காடுகள் என்ற பெயரில் சில இடங்களில் வெறும் முள்ளாகவே இருக்கின்றன. தழையும் கிடையாது. ஆடு, மாடுகள்கூட மேய்வதற்கு லாயக்கில்லாமல் இருக்கும் அவற்றை விளைநிலங்களாகக் கொண்டுவர அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இது தழையைப்பற்றிய கேள்வி. கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்பது விளைநிலங்களாக மாற்றுவது குறித்து. அதைப்பற்றியும் அரசு பரிசீலனை செய்து காட்டிலாகாவினரின் ஆலோசனையைக் கேட்டு கரம்பாக இருக்கக்கூடிய நிலங்கள் பற்றி மாவட்டக் கலெக்டரும், காட்டிலாகா அதிகாரியும் செயற்குறிப்பு அனுப்புகிறார்கள். அதைப்பற்றியும், நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

சிங்கப்பெருமாள் கோவில் அருகிலுள்ள பால் குளிரவைக்கும் நிலையம்.

*135 வினா:—திரு. கொளத்தூர் கோதண்டம் : மாண்புமிகு உணவு வேளாண்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பால் பண்ணைத் திட்டத்தின்கீழ் G. S. T. நெடுஞ்சாலையில் சிங்கப்பெருமாள் கோவிலுக்குப் பக்கத்தில் உள்ள **Milk Chilling Centre** எப்போது கட்டப்பட்டது ?

(இ) அது செயல்படாமலிருப்பதின் காரணம் என்ன ?

(உ) அது மீண்டும் செயல்பட எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ள அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) சிங்கப்பெருமாள் கோவிலில் "பால் குளிரவைக்கும் நிலையம்" **(Milk Chilling Centre) 1963**-ம் ஆண்டில், அயன்புரம், சென்னைக் கூட்டுறவு பால் வழங்கு சங்கத்தால் நிறுவப்பட்டது.

(இ) சென்னை, கூட்டுறவுப் பால் வழங்கு சங்கம், பெருமுயற்சிகள் எடுத்தும்கூட அந்தப் பகுதியில் கணிசமான அளவுக்குப் பால் கொள்முதல் செய்து அந்த நிலையத்தைச் சிக்கனமாக நடத்த இயலவில்லை.

(உ) பாலைக் குளிர வைக்கும் யந்திரங்கள் பிரிக்கப்பட்டு, சென்னை பால் பண்ணை பால் வழங்கு திட்டத்தைச் சேர்ந்த பாலு செட்டி சத்திரம், வாலாஜாபாத், சத்துவாச்சேரி ஆகிய இடங்களிலுள்ள பால் குளிரவைக்கும் நிலையங்களில் முன்னரேயுள்ள யந்திரங்களுடன் சேர்த்துப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தக் கட்டடம் பால் வழங்குத் திட்டத்திற்கோ அல்லது கால்நடை வளர்ப்புத் துறைக்கோ பயன் படாததால், சங்கம் அதை விற்றுவிட முயற்சி செய்து வருகிறது.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவரவர்களே, இந்த "மில்க் சில்லிங் செண்டர்"க்கு எவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது ? செலவழிக்கப்பட்டு இந்தத் திட்டத்தைத் தயார் செய்தபிறகு ஒருநாள்கூட அது வேலை செய்யவில்லை என்று தெரிகிறது. எனவே, அதைத் தயார் செய்த சம்பந்தப் பட்டவர்கள்மீது அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க முன்வருமா ? மேற்கொண்டு இப்படிப்பட்ட செயல்கள் நடைபெறுமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அரசாங்கம் கொடுத்த தொகை ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய். யூனியன் செலவு செய்த தொகை **37,870** ரூபாய், 67 பைசா. கனம் அங்கத்தினர் குறிப்பிடுவது போல இது ஒரு நாள்கூட இயங்கவில்லை என்பது சரியல்ல. 62-லே அமைக்கப்பட்டு 63-ஆம் வருஷம் எப்ரலிலே செயல்படத் துவங்கியது

1966-ம் வருஷம் வரையிலே, ஜூன் மாதம் வரையிலே செயல் பட்டிருக்கிறது. ஜூலை மாதத்திலிருந்துதான் இத்திடம் கைவிடப் பட்டிருக்கிறது.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்த "சில்லிங் செண்டர்" முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் தன்னுடைய தொகுதியிலே ஆரம்பிக்கவேண்டுமென்று கருதி சிங்கப் பெருமாள் கோவிலிலே ஆரம்பிக்கப்பட்டதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது என்று கேளுங்கள். குற்றம் சாட்டும் வகையிலே கேட்காமல், நீங்கள் பெற நினைக்கும் விடை வரும் விதத்தில் வேறு விதமாகக் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : இந்தக் காரணங்களுக்காக அந்த இடத்திலே மாற்றப்பட்டதா? அப்படியானால், அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இது 1962-லே ஆரம்பிக்கப்பட்டு 1963-லே வேலை துவங்க ஆரம்பித்தது. ஏற்கெனவேயிருந்த முதலமைச்சரவர்களின் தொகுதியா அல்லது வேறு அங்கத்தினருடைய தொகுதியா என்றும், அன்று எந்தத் தொகுதியில் சேர்க்கப்பட்டது என்பதுபற்றியும் தகவல் இல்லை.

THIRU K. VINAYAKAM : Is the Hon. Minister aware of the fact that the dairy at Singaperumalkoil does not get enough quantity of milk in that area, because the Ayyanavaram Milk Society has been allowed to operate in that area in competition with Government dairy there with the result there is cut-throat competition between the two and the Milk Society is able to get better product and larger quantity when compared to Government Project?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இது சிங்கப்பெருமாள் கோவிலுக்குப் பக்கத்திலுள்ளதைப்பற்றிய கேள்வி. அயனாவரத்திலுள்ளதற்கும் இதற்கும் போட்டியிருந்ததாகத் தெரியவில்லை.

திரு. முனு ஆதி : தலைவரவர்களே, மாதவரத்திலே உள்ள பண்ணையில் அந்தப் பக்கத்திலே இருப்பவர்களிடமிருந்து கொள்முதல் செய்வது கிடையாது. அய்யனாவரம் திட்டத்திற்கு $1\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் கடன் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பால்பண்ணை இயங்காமல் போனதும் அந்த $1\frac{1}{2}$ இலட்சம் ரூபாயைப் பெறுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : 1968-ஆம் வருஷம் ஜனவரி மாதம் வரையில் அரசாங்கத்திற்கு 64,320 ரூபாய் திருப்பிக் கட்டியிருக்கிறார்கள். மேலும் அதனுடைய இயந்திர சாதனங்களைப் பிரித்து எடுத்ததில் 31,710 ரூபாய் 12 காசு கிடைத்திருக்கிறது.

நத்தத்தில் மாட்டுப் பண்ணை.

*136—வினா.—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு உணவு, வேளாண் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் வட்டம், நத்தத்திற்கு அண்மையில் மாட்டுப் பண்ணை அமைப்பதற்கான ஆய்வு வேலைகள் முடிந்தும் இன்று வரை பண்ணை அமைக்கும் பணியிணைத் தொடங்காததின் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : மன்றப் பேரவையில் விவர அறிக்கை (a) ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

(a) 208-ம்பக்கத்தில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது